(9)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

## திண்டுக்கல் மாவட்டம்

## 1432-ம் பசலி ¼ கிலோ(250கிராம்) லேமினேட்டட் டின் கண்டெய்னர் ஸ்பூனுடன் சப்ளைக்கான - ஒப்பந்தப்புள்ளி படிவம்

பசலி 1432-க்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உண்டான காலத்திற்கு **24.06.2022ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டிய ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம்

| வரிசை எண் | சப்ளை செய்யப்படவுள்ள இனத்தின் முழு விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தலின்றி எழுதப்பட வேண்டும் ( அனைத்து வரிகள் உள்பட ) ரூ. பை |
|---|---|---|
| 1 | ¼ கிலோ(250கிராம்) FOOD GRADE லேமினேட்டட் டின் கண்டெய்னர் ஸ்பூனுடன் சப்ளை செய்ய மேற்படி டின் ஒன்றின் விலை (ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் தெரிவித்த தரம் மற்றும் அளவுகளில்) | |

குறிப்பு.

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையில், ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு படித்து அறிந்து கையொப்பமிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் நிபந்தனைகளை நன்கு அறிந்தவராகவே கருதப்படுவர்.

2. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் இனத்திற்கென குறிக்கப்பட்டுள்ள வைப்புத்தொகையை வங்கி வரைவோலையாக பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

3. அசல் சால்வன்சி சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது அதற்கு நிகரான தொகைக்கு வங்கி வரைவோலை இணைப்பவர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முடியும். சால்வன்சி / வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளி படிவத்திலுள்ள அனைத்து நிபந்தனைகளையும் ஏற்று இந்த ஒப்பந்தப்புள்ளியைக் கொடுக்க வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமானவரி, விற்பனை வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு பட்டியலிலும் மேற்படி வரிகள் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண் அட்டை **(PAN CARD)& GST** சான்று நகல் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்
(முழு விலாசத்துடன்)

# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

## 1432-ஆம் பசலிக்கு பஞ்சாமிா்தம் அடைக்கத்தேவையான ¼ கிலோ(250கிராம்) லேமினேட்டட் டின் கண்டெய்னா் ஸ்பூனுடன் சப்ளை செய்ய ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்.

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய 1432-ம் பசலிக்காலத்தில் பஞ்சாமிா்தம் அடைக்கப்பயன்படும் ¼கிலோ லேமினேட்டட் டின் கண்டெய்னா் (Food Grade) சப்ளை செய்வதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை **24.06.2022ம் தேதி பிற்பகல் 01.00 மணிக்குள்** கொடுக்க வேண்டும். மேற்காணும் தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **24.06.2022ம் தேதி பிற்பகல் 03.00 மணியளவில்** ஒப்பந்தப்புள்ளிதாரா்கள் அல்லது அவா்களது அங்கீகாரம் பெற்ற நபா்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**சப்ளை செய்யப்பட வேண்டிய ¼ கிலோ(250கிராம்) Food Grade லேமினேட்டட் டின் கண்டெய்னா் அளவு விவரம்**

மூடி இல்லாமல் மேல்விட்டம் 8.8செ.மீ

மூடி இல்லாமல் அடிவிட்டம் 8.0செ.மீ

மூடி இல்லாமல் டின் உயரம் 4.0 செ.மீ

**பிளாஸ்டிக் ஸ்பூன் அளவு (Plastic Spoon Detail)**

ஸ்பூனின் மொத்த உயரம் - 9 செ.மீ

ஸ்பூனின் குழிவான பகுதியின் உயரம் - 3 செ.மீ,

ஸ்பூனின் குழிவான பகுதியின் அகலம்-2செ.மீ

**கோட்டிங் விவரம்**

டப்பாவின் உள்பக்கம் உணவு பொருள் பயன்படுத்தக்கூடிய பூச்சு பூசியிருக்க வேண்டும் (Inside Food grade lacquering should be done and Inside Strip lacquering should be applied on the welded surface).

**லேபிள் பிரிண்டிங் விவரம்**

டப்பாவின் வெளிபுறம் உள்ள லேபிளில் கீழ்கண்ட விபரங்கள் தமிழ் ஆங்கிலம் மற்றும் மலையாள மொழிகளில் பிரிண்ட் செய்யப்பட்டும் மலையுடன் பழநியாண்டவா் படம், ரோப்காா், வின்ச் படம் ஆகிய விபரங்கள் திருக்கோயிலின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். திருக்கோயில் நிா்வாகத்தால் தெரிவிக்கப்பட்ட

☐

FSSAI Lic.No.
10017042003492(Central)
Abishega Panchamirtham
Ingredients
Banana
Jaggery
Seedless Dates
Diamond Sugar Candy
Ghee
Honey
Cardamom

**Nutritional Information Per 100gram Product (Approx)**

| | | |
|---|---|---|
| Fat | : | 1.07% |
| Protein | : | 2.60% |
| Carbohydrate | : | 74.8% |
| Energy (K.cals) | : | 319.0 |

**Manufacturer:** Arulmigu Dhandayuthapani Swamy Temple, West Giriveethi, Adivaram, Palani.

Net Weight: 210 Grams

Batch No.

DOM:

Best before 15 days from DOM

பொருள் விபரம், எடை விபரம், FSSAI உரிம விபரம் மற்றும் "Best Before 15 days from the date of manufacturing Please refer bottom" என்ற விபரம் ஆகியவை அடங்கிய லேமினேடெட் லேபிள் டப்பாவை சுற்றி வெளிப்புறம் ஒட்டி சப்ளை செய்ய வேண்டும்.

**பேக்கிங் விவரம் -**

270 எண்ணிக்கை கொண்ட ¼கிலோ Food Grade லேமினேட்டட் டின் கண்டெய்னர்கள் 3-Ply அட்டைப் பெட்டியில் வைத்து சப்ளை செய்ய வேண்டும். மாதிரிக்காக பத்து டின்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

**விலை குறிப்பிடுவதற்கான விவரம்**

ஒப்பந்தப்புள்ளியில் ¼கிலோ லேமினேட்டட் டின் கண்டெய்னர் 1-க்கு விலையினை எண் மற்றும் எழுத்தால் தெளிவாக குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசால் நிர்ணயிக்கப்படும் விற்பனை வரி, வருமான வரி, GST வரி மற்றும் இதர நடைமுறையில் உள்ள வரிகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். மேற்படி வரித்தொகை ஒவ்வொரு பட்டியலிலும் பிடித்தம் செய்து மீதி பட்டியல் தொகை வழங்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளியல் தெளிவாக ஒப்பந்த்தாரரின் முழு முகவரி குறிப்பிடப்பட வேண்டும்.

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1 ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையாக **ரூ.1,00,000/-** (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பதவி பெயருக்கு பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையினை பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். வங்கிவரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. 01.05.2022-ம் தேதிக்குப்பிறகு வட்டாட்சியரிடம் பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயருக்கான **ரூ.1,00,000/–**க்கான (ரூபாய் ஒரு லட்சம்) அசல் சால்வன்சி சான்றிதழ் இணைக்க வேண்டும். சால்வன்சி சான்றிதழ் தர இயலாதவர்கள் அதற்குரிய தொகைக்கு "இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்" என்ற பெயரில் பழநியில் மாற்றத்தக்க வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிவரைவோலையாகவும் செலுத்தலாம்.

3 ஒப்பந்தப்புள்ளிதாரர் நிறுவனம் ISO தரச்சான்று பெற்றுள்ளதற்கான சான்றின் நகல் ஒன்றினை இணைக்க வேண்டும்.

4 ஒப்பந்தப்புள்ளியில் பங்குபெறும் நிறுவனம் தனது உற்பத்தி தொழிற்சாலையில் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட இனமான 1/4 கிலோ FOOD GRADE லேமினேடெட் டின் நாள் ஒன்றுக்கு 50,000 எண்ணிக்கையில் தானியங்கி இயந்திரம் மூலம் உற்பத்தி செய்வதற்கான திறன் பெற்றுள்ளது என்பதற்கான சான்றினை தகுதியான அரசு அலுவலரிடமிருந்து பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மேற்காணும் உற்பத்தி திறன் குறித்து தொழிற்சாலையில் ஆய்வு செய்து பார்வையிட திருக்கோயில் நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு.

5 ஒப்பந்தப்புள்ளிதாரர் தான் சப்ளை செய்யவுள்ள மேற்காணும் அளவுகளில் குறிக்கப்பட்ட FOOD GRADE லேமினேட்டட் கம்போசிட் டப்பாக்கள் உணவுத்தரமாக (FOOD GRADE) உள்ள என்பதற்கான மத்திய அரசு அல்லது மாநில அரசு தரபரிசோதனை நிலைய சான்று நகலினை ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைக்க வேண்டும். மேற்காணும் உணவுத்தரச்சான்று (FOOD GRADE) இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

6 ஒப்பந்தப்புள்ளிதாரரது நிரந்தர கணக்கு எண் (PAN CARD)& GST சான்றின் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7 ஒப்பந்ததாரர் பெயரில் பெட்ஜார்கள் தயார் செய்து வருவதற்கு நடப்பு காலத்தில் செல்லத்தக்க வகையில் வணிகவரித்துறையில் பதிவு (TIN நம்பருடன்) செய்ததற்கான பதிவு சான்றிதழ் நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் வைத்து இணைக்க வேண்டும்.

8 ஒப்பந்ததாரர் நிறுவனம் தனியார் (Proprietorship) அல்லது பங்குதாரர் நிறுவனம் (Partnership Firm) அல்லது தனியார் / பொது நிறுவனம் (Private/Public Limited) என எவ்வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த பதிவு சான்றின் நகல் ஒன்று இணைக்கப்பட வேண்டும்.

9 ஒப்பந்தப்புள்ளிதாரர் 1432-ம் பசலி முழுவதும் சப்ளை செய்வதாக இருக்கும் மேற்படி கண்டெய்னர்கள் பத்தினை மாதிரிக்காக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மாதிரி இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10 ஒப்பந்ததாரர் சென்ற ஆண்டில் ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம்) மதிப்பிற்கு மேற்படி டப்பா தயாரித்த விவரத்திற்கு வணிகவரித்துறையினர் வழங்கிய சான்றிதழ் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

11 ஒப்பந்தப்புள்ளிதாரா் மேற்படி டப்பாக்களை ஏற்கனவே FSSAI உரிமம் பெற்ற உணவுப்பொருட்கள் தயார் செய்யும் நிறுவனங்களுக்கு விநியோகம் செய்ததற்கான ஆதாரம் இணைக்க வேண்டும்.

12 தொழிற்சாலை இயங்கும் தன்மை குறித்த தகுதிவாய்ந்த அலுவலரின் சான்றிதழ் பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

13 ஒப்பந்தப்புள்ளி தருபவர்கள் மேற்படி டப்பா தயாரிப்பில் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது ஈடுபட்டுள்ளவா்களாக இருக்க வேண்டும். டெண்டா்தாரா்கள் இதற்கான ஆதாரத்தையும் டெண்டருடன் சமா்ப்பிக்க வேண்டும். இந்த ஆதாராம் விற்பனைவரி அலுவலகத்திலிருந்தோ, நகராட்சி அலுவலகத்திடமிருந்தோ பெற்றிருக்க வேண்டும்.

14 மேற்காணும் வரிசை எண்.1 முதல் 12 வரை உள்ள நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஒப்பந்தப்புள்ளியுடன் தவறாது இணைத்து கொடுக்க வேண்டும். இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

15 ஒப்பந்ததாரா் இந்து மதத்தைச் சேர்ந்தவா்களாக இருக்க வேண்டும்.

16 ஒப்பந்தப்புள்ளிதாரா் ஒப்பந்தப்புள்ளியில் சப்ளை செய்வதாகக் குறிப்பிட்டுள்ள பொருளின் விபரத்தை ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் குறிப்பிட வேண்டும்.

17 ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் "பெறுநா்" என்ற இடத்தில் " இணை ஆணையர்/ செயல் அலுவலா்", அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி " என்ற முகவரி குறிப்பிடப்பட வேண்டும்.

18 ஒப்பந்தப்புள்ளிதாரா் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி திருக்கோயில் நிா்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனது சொந்த செலவில் உடன் ரூ.20/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்தான ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

19 பஞ்சாமிா்தப்பிரிவு பொறுப்பாளரிடம் அவ்வப்போது ஒப்பந்ததாரரே நேரில் கொள்முதல் கேட்பு சீட்டு பெற்றுக்கொண்டு, கொள்முதல் கேட்பு சீட்டிலுள்ள விவரப்படி தேவையான காலத்தில் தேவையான அளவு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மாதிரிப்படியே தங்கு தடையின்றி டப்பாக்களை சப்ளை செய்ய வேண்டும். அவ்வாறு தேவைப்படும் அளவிற்கு சப்ளை செய்ய தவறினால், திருக்கோயில் நிா்வாகம் மூலம் வெளிமார்க்கெட்டில் நேரடியாக கொள்முதல் செய்து அதனால், ஏற்படும் கூடுதல் செலவீனங்கள் ஒப்பந்தப்புள்ளிதாரரிடம் வசூல் செய்யப்படும்.

20 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் ¼கிலோ டப்பா நல்ல தரமானதானதாக இருக்க வேண்டும்.

21 "ஐயப்ப சீசன், தைப்பூசம்", "பங்குனி உத்திரம்", விசேட காலங்கள் மற்றும் பக்தா்கள் அதிகமாக வரும் காலங்களில் அதிகமான அளவு தேவைப்பட்டியல்படி தங்கு தடையின்றி தரமான டப்பாக்கள் ஒப்பந்தப்புள்ளியில் இணைத்திருந்த மாதிரிப்படியே சப்ளை செய்ய வேண்டும்.

/5/

22 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்படும் மேற்படி டப்பாக்கள் ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது சொந்தப்பொறுப்பிலும் மற்றும் செலவிலும் திருக்கோயில் பஞ்சாமிர்த தயாரிப்பு பிரிவிற்கு எடுத்துச்சென்று சப்ளை செய்யவேண்டும்.

23 பஞ்சாமிர்தப்பிரிவிற்கு ஒப்பந்தப்புள்ளிதாரரால் கொண்டு சென்ற ¼ கிலோ டப்பாக்களை பஞ்சாமிர்தப்பிரிவு பொறுப்பாளரால் நன்றாக பரிசோதிக்கப்பட்டு அவைகளின் தரம் நன்றாக இருப்பதாக பிரிவுப் பொறுப்பாளர் ஏற்றுக்கொண்டால் உடன் அவர்கள் முன்னிலையில் எண்ணிக்காண்பித்து வழங்கப்பட வேண்டும்.

24 ஒப்பந்ததாரர் தனது சார்பாக வேறு நபர்களை சப்ளை செய்ய அனுமதிக்கவோ அல்லது தனது ஒப்பந்தத்தை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள்ஒப்பந்தம் விடவோ கூடாது.

25 ஒப்பந்ததாரர் திருக்கோயில் ஒப்பந்த நிபந்தனைகளுக்கும், நடைமுறைகளுக்கும் சென்னை இந்து சமய அறநிலைய சட்டவிதிகளுக்கும் உட்பட்டு சப்ளை செய்ய வேண்டும்.

26 டப்பாக்களை தேவைப்பட்டியல்படி தேவையான காலங்களில் தேவைக்கேற்ப சப்ளை செய்யாவிட்டாலோ அல்லது ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்படி நடந்து கொள்ளாவிட்டாலோ ஒப்பந்ததாரருக்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி டெண்டர் ரத்து செய்யப்படும். இதனால் திருக்கோயிலுக்குத் தேவையான ¼ கிலோ டப்பாக்கள் வெளி சந்தையிலோ அல்லது கொட்டேஷன்கள் பெற்றோ அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் மூலமோ கொள்முதல் செய்யப்படும்.

27 மேலும் இதனால் திருக்கோயிலுக்கு இழப்பேதும் ஏற்பட்டால் அதற்கு முதல் ஒப்பந்ததாரரே பொறுப்பாக்கப்பட்டு இந்த இழப்புத்தொகையினை முதல் ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும். மற்றும் திருக்கோயிலால் பிடித்தம் செய்யப்பட்ட 10% பில் தொகையிலிருந்தும், வைப்பு தொகையிலிருந்தும் மற்றும் பட்டியல் தொகையிலிருந்தும் மேற்படி இழப்பு தொகை பிடித்தம் செய்யப்படும். தவறினால் சட்டவிதிகளின்படி, கோர்ட் மூலம் கோர்ட் செலவுடன் வட்டியுடன் சேர்த்து வசூலிக்கப்படும். மேலும் ஒப்பந்ததாரர் பெயர் கருப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.

28 காரணம் ஏதும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவோ, நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

29 ஒப்பந்தப்புள்ளிதாரரால் சப்ளை செய்யப்பட்ட மேற்படி டப்பாக்களுக்கு பட்டியல் வழங்குவதில் நிர்வாக ரீதியில் ஏதேனும் காலதாமதம் ஏற்பட்டாலும், அந்தக் காலதாமதத்தைக் காரணம் காட்டாமல் தொடர்ந்து தேவைக்கேற்ப தடையின்றி வழங்க வேண்டும். 1432ம் பசலிக்கு சப்ளை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் மேற்படி பசலி முடிவடைந்த பிறகு 1433 பசலி டெண்டர் கோரப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்படும் வரையில் திருக்கோயில் நிர்வாகம் கேட்கும்பட்சத்தில் இதே தொகைக்கே தொடர்ந்து மேற்படி டப்பாக்கள் சப்ளை செய்ய வேண்டும்.

30 ஒப்பந்தப்புள்ளி சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்

31 ஒப்பந்தப்புள்ளிதாரரால் டப்பா சப்ளை செய்வதில் இயற்கையாகவோ அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் இடையூறு ஏற்பட்டால் இதற்கு திருக்கோயில் நிர்வாகம் ஏதும் பொறுப்பேற்காது.

32 சப்ளை செய்யப்படும் டப்பாக்களுக்கு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் பட்டியல் ஒவ்வொன்றிலும் 10% வீதம் பிடித்தம் செய்து கொண்டு மீதித் தொகை வழங்கப்படும். பசலி முழுவதும் பிடித்தம் செய்த தொகை பசலி முடிந்தவுடன் ஒப்பந்ததாரரால் திருக்கோயிலுக்கு ஏதும் இழப்பேற்பட்டதா? என பரிசீலனை செய்து, இழப்பேற்பட்டிருப்பின் அத்தொகையினைப் பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும். இழப்பேற்படாவிடில் பிடித்தம் செய்துள்ள தொகை வட்டியின்றி திரும்ப வழங்கப்படும்.

33 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து சென்னை, இந்து சமய அறநிலையத்துறை, ஆணையரால் ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் செய்யப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு அனுமதி வழங்கப்படும் வரை, வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டாவது குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை திரும்ப வழங்கப்படமாட்டாது.

34 மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஆணையரால் அங்கீகரிக்கப்படும் ஒப்பந்ததாரர் செலுத்திய ஒப்பந்த வைப்புத் தொகையினைத் தவிர மற்றவர்களது ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

35 1432-ம் பசலி தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று, அதில் மேற்படி டப்பாக்கள் கொள்முதல் செய்த வகையில் தணிக்கை ஆட்சேபணை ஏதுமில்லையென்று அறிவித்த பின்னரே ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள டெபாசிட் தொகை திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

36 ஒப்பந்ததாரரின் தொழிற்சாலையின் பெயர், இடம் மற்றும் நிறுவனத்தில் நிறுவியுள்ள இயந்திரம் பற்றிய புள்ளி விவரங்களை குறிப்பிட வேண்டும்.

37 ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மீறப்பட்டாலோ அல்லது சரிவர நிறைவேற்றத் தவறினாலோ ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

38 திருக்கோயில் நலனுக்கெதிராக செயல்படுவபவர்கள் திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கி, பல்வகை உரிமக் கட்டணம் நிலுவை வைத்துள்ளவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடுத்தவர்கள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகளை பசலி காலம் முடிய பூர்த்தி செய்யாதவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள்.

39 டெண்டர் முடிவு செய்த பின் கூறப்படும் எவ்வித ஆட்சேபனையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. டெண்டர் திறப்பின் போது ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் திருக்கோயில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களால் கூறப்படும் முடிவே இறுதியானது.

40 ஒருவர் கொடுத்த டெண்டர் விலை குறைவாக இருந்தபோதிலும் ஒழுங்காக சப்ளை செய்ய மாட்டார் என்று இணை ஆணையர்/செயல் அலுவலர் கருதினால் மேற்படி டெண்டரை நிராகரிக்க இணை ஆணையர்/ செயல் அலுவலர் அவர்களுக்கு பூர்ண உரிமை உண்டு இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

41 இதர நிபந்தனைகள் டெண்டர் திறப்பின் போது தெரிவிக்கப்படும்.

(ஒம்)நா.நடராஜன்
இணை ஆணையர்/செயல் அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

30/5/2022
மேலாளர்

30/5/22